1978 செப்டம்பர் 1]

தரப்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. பல்கலைக் கழக மானியக் குழுவோ அடிப்படைச் சம்பளத்தைத் தவிர வேறு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் பற்றி எதையும் சொல்லவில்லை. அடிப்படைச் சம்பளத்தைப் பொறுத்து மட்டுமே அது பரிசிலித்தது. எனவே ஊதியக் குழுவில் இதுபற்றி வராவிட்டாலும், அரசாங்கமாவது இதைப் பரிசிலித்து மற்றவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை, கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கும் கொள்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஊதியக் குழுவின் சிபாரிசுகள் வெளி வந்ததற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் கூறும் நிலை இருந்து, தேவைப்படுமானால் அதைப்பற்றிப் பரிசிலிப்பதை அரசு ஏற்றுக்கொள்வதற்கு சங்கடமேதுமில்லை.

Sheep Breeding Co-operative Societies.

* 19. *Q.*—THIRU V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) the number of places in Salem District where Sheep Breeding Co-operative Societies have been established; and

(*b*) the number of persons to whom loans have been sanctioned through these Societies?

ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள்.

திரு. வி. ஆர். பெரியண்ணன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை இடங்களில் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன?

(இ) இவைகளின் மூலம் எத்தனை பேர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சி கழகத்திட்டத்தின் கீழ் 3 இடங்களிலும், சிறப்பு கால்நடை பாமரிப்புத் திட்டத்தின்கீழ் 27 இடங்களிலும் ஆடுவளர்ப்புக் கூட்டுறவு சங்கங்கள் எற்படுத்தப்பட்டுள்ளன.

(இ) வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத் திட்டத்தின் கீழுள்ள 3 ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 132 பேரும், சிறப்புக் கால்நடை பாமரிப்பு திட்டத்தின் கீழுள்ள 27 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களில் 14 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 492 பேரும் பயனடைந்

துள்ளனர். மீதமுள்ள 13 கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் நடப்பு நிதி ஆண்டில் கடன் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : இந்தச் சங்கத்தின் மூலம் வழங்கப்படுகிற தொகையைப் பொறுத்தவரையில், சங்கத்திற்கு இவ்வளவு என்று ஒரு தொகையைக் கொடுக்கிறார்களா அல்லது ஒரு உறுப்பினருக்கு இவ்வளவு என்று தரப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : வேளாண்மை மறு நிதிக் கழகத்தின் மூலமாக, சிறு விவசாயிகள், மற்றும் மிகச் சிறிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், மாவட்ட மத்திய வங்கிகள் மூலமாகவும் அரசு சார்பாகவும் கடனும் மானியமும் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் குறிப்பாக சேலம் மாவட்டத்தில் 610 ஆட்டின நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆட்டின நிலையமும் ரூபாய் 3,000 முதலீட்டுத் தொகையைக் கொண்டதாகும். ஒவ்வொரு சிறு விவசாயிக்கும் ரூபாய் 750 மானியமாகவும் மிகச் சிறிய விவசாயிக்கும் விவசாயத் தொழிலாளிக்கும் ரூபாய் 1,000 மானியமாகவும் தரப்படுகிறது. இதனால் தனியார்தான் பயன்பெறுகின்றனர்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : சேலம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆடு வளர்ப்பு சங்கங்களுக்கு ஆடுகள் எங்கேயிருந்து வாங்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிகிறவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : இப்போதுள்ள கடன் தொகைக்கு எத்தனை சதவீதம் வட்டியாக வசூலிக்கப்படுகிறது ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : வேளாண்மை மறு நிதிக் கழகத் திட்டத்தின் மூலமாக சிறு விவசாயிகளுக்கு ரூ. 750-ம் அதாவது 25 சதவிகிதமும், மிகச் சிறிய விவசாயிகள், தொழிலாளர்களுக்கு ரூ. 1,000-ம் அதாவது 33-1/3 சதவிகிதமும் மானியமாகக் கிடைக்கிறது. கடன் மீதான வட்டி பற்றிய குறிப்பு இப்போது என்னிடமில்லை.